[1st February 1972

(உ) இந்தத் தொட்டிகள் சரியாக அளவை செய்யப்படவில்லை அல்லது இவை அளவையே செய்யப்படவேயில்லை என்றும் அவை ஏற்றிச் செல்லுவதாகக் கூறப்படும் சரக்குகளைச் சேர்ப்பதில்லை என்றும் எடை-அளவை கட்டுப்பாட்டு அதிகாரிக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) ஆம்.

THIRU A. R. DAMODARAN : Sir, the administration of 'Weights and Measures' is with the State Government. May I know when fees are prescribed for calibration of petrol pumps and tank lorries, why exemption should be granted by the State Government in the case of calibration of railway tank wagons?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, ரயில்வே எண்ணெ வண்டிகளின் அளவைகளைப் பரிசோதனை செய்வது மாநில அரசு எடை-அளவைத்துறையா மத்திய அரசுத் துறையா என்பது மூன்றாண்டுகளாகப் பரிசீலனையில் இருந்து வந்தது. 1971-ல் தான் மாநில அரசு எடை-அளவைத் துறை ஆய்வாளர்களே ரயில்வே எண்ணெய் வண்டி அளவைகளைப் பரிசோதனை செய்யலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ரயில்வே ஜெனரல் மானேஜரோடு கடிதப் போக்கு வரத்து நடைபெற்றது. பரிசோதனைக்கான அலுவலாளர்கள், மற்ற விவரங்களை எல்லாம் ரயில்வே மானேஜரிடம் கேட்கப்பட்டிருக்கின்றன. விவரம் கிடைத்தவுடன் ரயில்வே எண்ணெய் வண்டிகளின் அளவைகளைப் பரிசீலனை செய்ய மாநில எடை-அளவைத் துறை ஆய்வாளர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

THIRU A. R. DAMODARAN : It has been reported, Sir, that many of these Railway tank wagons have been short delivering to agents and dealers who have received such wagons and that itself is in contravention of the Weights and Measures Act. May I know, therefore, whether the Government of Tamil Nadu will speedily take action, because for each wagon, they should also pay calibration fees of Rs. 500 or Rs. 600 ? Such exemption should not be granted in the case of Railway tank wagons.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, அது குறித்து கடலூரிலுள்ள அகில இந்திய பெட்ரோல் வியாபாரிகள் ஃபெடரேஷனிலிருந்து முறையீடு ஒன்று வந்திருக்கிறது. அவர்கள் நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

Mango Juice

*85 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that a large quantity of mango juice is being exported from North Arcot District during 1971 to foreign countries; and

(b) if so, the details thereof?

மாம்பழச்சாறு

திதிரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971-ஆம் ஆண்டில், வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து, அதிக அளவு மாம்பழச்சாறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : (a) & (b) A quantity of 80 tonnes of mango juice was exported to the Soviet Union during **1971.**

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, எந்த மாம்பழத்தின் சாறு அதிகப்படியாக சோவியத் யூனியனில் விரும்பப்படுகிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : எந்த மாம்பழம் என்று கேட்டார்கள். எந்த வகை என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. மாம்பழத்தின் சாறு என்றுதான் என்னிடம் இருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : அது புளித்த சாறு, இனித்த சாறு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இனித்த சாறு; டின்னில் அடைக்கப்பட்டது.

Committee for Cotton Development

* 86 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are any proposals under the consideration of the Government to set up a Committee for Cotton Development ; and

(*b*) if so, the details thereof?

பருத்தி வளர்ச்சிக் குழு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பருத்தி வளர்ச்சிக் குழு ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) நிறுவப்பட இருக்கின்ற குழுவினைப்பற்றிய முடிவான தீர்மானம் ஏதும் இதுவரை எடுக்கப்படாததால் தற்போது இதுபற்றி எவ்வித தகவலும் அளிக்க இயலவில்லை.